நீலகிரி மாவட்டம் சார்பு நீதிமன்றத்தில் 2026-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ஆம் நாள் சாட்சியாகிய- ராஜன் என்பவரின் வாக்குமூலம் 1969- ஆம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திரு. மனோகரன், உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/ சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜன் | மதம் | : இந்து |
| தந்தை./கணவர் பெயர் | : மூடளி கவுடர் | ஜாதி | : |
| கிராமம் | : முள்ளிகொரை | தொழில் | : |
| தாலூக்கா | : உதகை | வயது | : 80 |

---

**23.2.2026**

(துவங்கப்படும் நேரம் - 11.32 AM)

(முடிக்கப்பட்ட நேரம் - 11.40 AM)

**O.S. No.201/2017 (D.W - 3)**

முதல் விசாரணை **:-**

நான் இந்த வழக்கின் 1 ம் பிரதிவாதியாவேன். எனது தரப்பு முதல் விசாரணையை பிரமாண பத்திரமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ளது எனது கையொப்பம் தான். அது நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதை நான் படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். எனது தரப்பில், 30.11.1977 ம் தேதியிட்ட 1333/1977 பத்திர எண் உள்ள கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**-5** ஆகும். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தாவா எண்.292/1993 ன் வழக்குறையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**–6** ஆகும். மாவட்ட உரிமையியல் நீதிமன்ற தாவா எண்.292/1993 ன் எதிர்வழக்குறையின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ**–7** ஆகும். தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென பிரத்திக்கிறேன்.

வாதிதரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.